
# சத்தியம் உங்களை இவற்றிலிருந்து விடுதலையாக்கும்




ப்ரின்ட்லேன்ட் பப்லிஷர்ஸ்

லைனஸ் மற்றும் சூசன் டேனியேல்


To Subscribe to this magazine Free of Cost:


**In Sri Lanka**
*Write to:*
The Christadelphians,
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA.

**In India**
*Write to:*
The Christadelphians,
P.O. Box 4237
Bangalore 560-042
India




# புது சிருஷ்டி


சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 42


- **மனித இயல்பு**
  நாமெல்லாரும் பாவம் செய்யக்கூடியவர்கள் - மேற்கொள்ள நமக்கு உதவுவது தேவனுடைய வார்த்தை
- **இயேசுவும் பாவிகளும்**
- **ஆண்டவர் பக்கம்**
  (மணித்துளி சிந்தனை)
- **வாசித்துச் சிந்தித்தல்**

# Issue 42


- **மனித இயல்பு**
  நாமெல்லாரும் பாவம் செய்யக்கூடியவர்கள் -
  மேற்கொள்ள நமக்கு உதவுவது தேவனுடைய வார்த்தை
- **இயேசுவும் பாவிகளும்**
- **ஆண்டவர் பக்கம்**
  (மணித்துளி சிந்தனை)
- **வினாவிடை**
- வாசித்துச் சிந்தித்தல்

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரா்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்தில் வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகள் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
**e-mail: linus.daniel@hotmail.com**
http://tamil.icdelph.org/
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
The Christadelphians,
P.O. Box 4237, Bangalore 560-042
India
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
The Christadelphians,
P.O. Box 60, Negombo - 11500,
SRI LANKA.
Email: slcbm2@sltnet.lk

### புது சிருஷ்டி பதிப்பாளர் குழு

**லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்**

**திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.**

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்புச் செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# மனித இயல்பு

## நாமெல்லாரும் பாவம் செய்யக்கூடியவர்கள் - மேற்கொள்ள நமக்கு உதவுவது தேவனுடைய வார்த்தை

மனித இயல்புகளைக் கையாள்வது, நாம் சந்திக்கும் கடினமான சோதனைகளில் ஒன்றாகும். மாம்சத்தின் இச்சை கண்களின் இச்சை, நம் பெருமை இவை எல்லாமே நம்மில் கிரியை செய்கின்றன. (1யோவான் 2:15-16).



நாமெல்லாருமே பாவம் செய்யக்கூடிய இயல்புடையவர்களாயிருக்கிறோம். எபிரேய மொழியில் அது 'யெற்சேர்ஹரா' அதாவது 'தீய விருப்பம்' என்றழைக்கப்படுகிறது. ஆதியாகமம் 6:15ல் இப்பதம் பயன்படுத்தப்படுகிறது. 'மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும் அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் (யெற்சர்) நித்தம் பொல்லாததே (ஹரா) என்றும் கர்த்தர் கண்டார்" (ஆதி. 6:5). பவுல் அப்போஸ்தலனும் தன் பொல்லாத இயல்புகளை அவயவங்களில் போர் செய்கிறவைகளாகச் சித்தரிக்கிறார்.

"நன்மை செய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமையுண்டென்கிற ஒரு பிரமாணத்தைக் காண்கிறேன். உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் மேல் பிரியமாயிருக்கிறேன். ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன். அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப் பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது. நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார் ?" (ரோமர் 7:21-24).

‘நிர்ப்பந்தமான’ என்ற வார்த்தைக்கு ‘வேதனையுறும்’ எனப்பொருள் கொள்ளலாம். நாம் பாவத்தைக் கையாளும் சமயத்தில் அப்படித்தானே உணர்கிறோம்? நம்மைச் சுற்றிலும் சோதனைகள் சூழ்ந்துள்ளன. நம்மில் ஒவ்வொருவருக்கும் சோதனைகளின் கடுமையும், விதங்களும் வெவ்வேறாக இருக்கும். சிலருக்குக் கோபத்தில் பொங்கிக் கொப்பளிக்கும் சோதனை, மற்றவர்கள் மாம்ச இன்பம் குறித்து, பழிவாங்கும்படி அல்லது அற்பத்தனமாய் நடந்துகொள்ளும்படி சோதிக்கப்படுகிறார்கள். ‘‘அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்.” (யாக்கோபு 1:14) இந்தப் பொல்லாத இயல்பை மேற்கொள்ள நாம் விரும்புகிறோம். “எந்த மனுஷனும் மாயையே” (சங்கீதம் 39:5) என நாம் போதிக்கப்பட்டிருக்கிறோம். நல்ல வேளையாக, தேவன் நம்மை, நம் உருவத்தை அறிந்திருக்கிறார். இந்தப் பொல்லாத நினைவுகளின் தோற்றம் அல்லது பாவம் செய்யத் தூண்டும் இயல்பின் விளைவாக நாம் செய்யும் எல்லாப் பாவங்களையும் தேவன் மன்னிக்கச் சித்தமுள்ளவராயிருக்கிறார். நாம் பொல்லாதவர்களாயிருப்பதால், ஆண்டவருடைய கிருபைதான் மனிதன் இரட்சிக்கப்பட அனுமதிக்கிறது.

நாம் கிறிஸ்துவுக்குள் வந்த பிறகும் நாம் ஏன் தொடர்ந்து சோதிக்கப்படுகிறோம் என நம்மில் சிலர் யோசிக்கலாம். நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவுடனேயே தேவன் நம்மை மாற்றியிருக்க வேண்டும். அப்பொழுது சோதனைச் சங்கிலிகளின்றி (விலங்ககுளின்றி) தேவனுக்கு சேவை செய்திருக்கலாம் என்றெண்ணுகிறோம். ஆனால் தேவனின் ஞானத்தின்படி அதுவல்ல வழி. நாம் உண்டாக்கப்பட்டிருக்கிற சரீரத்தினாலேயே சோதிக்கப்படுகிறோம். நமக்கும் கிறிஸ்துவைப் பின்பற்றாதவர்களுக்குமுள்ள வித்தியாசம் யாதெனில் நாம் இஸ்ரவேலின் தேவனோடு ஒரு உடன்படிக்கை உறவு கொண்டிருக்கிறோம்

‘‘சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப்





பெறுவான்”

நம் மனித இயல்புகள் நம்மைப் பாவம் செய்யத் தூண்டும் திசையிலேயே இழுக்கின்றன. ஆனால் நாம் சந்திக்கும் சோதனையை மேற்கொள்வதற்கு நம்மை பெலப்படுத்தும் தேவனுடைய வார்த்தை நமக்கு உண்டு. நம் மாம்சத்தை மேற்கொள்வதற்கான சாவி இதுவே. எந்த அளவிற்கு நம் மனதில் தேவனுடைய வார்த்தையால் நிறைந்திருக்கிறோமோ அந்த அளவிற்கு நாம் போராட்டத்தில் வெற்றி பெறும் வாய்ப்பு அதிகரிக்கிறது.

உலகிலே மிக வல்லமையுள்ள புத்தகமாகிய வேதாகமத்திலிருந்து மேற்கோள் காட்டியே கிறிஸ்து சோதனைகளை ஜெயித்தார். அவரின் சோதனை குறித்து மத்தேயு 4ல் கூறப்பட்டிருப்பதை வாசிக்கவும். அவர் சோதிக்கப்பட்ட ஒவ்வொரு நேரமும் அவர் பதில் கூற வேதாகமத்திலிருந்து மேற்கோள் காட்டினார் - ஆகவே அவர் பாவம் செய்யவில்லை. அவரே நம் முன்மாதிரி. சோதனைகளை மேற்கொள்ள வேதவசனத்தைத் தான் நாம் பயன்படுத்தவேண்டும் எனக் காட்டியுள்ளார். தாவீது சங்கீதம் 119:9-11ல் இது பற்றிக் கூறுகிறார்.

‘‘வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறகிறதினால் தானே. என் முழு இருதயத்தோடும் உம்மைத் தேடுகிறேன், என்னை உமது கற்பனைகளை விட்டு வழிதப்ப விடாதேயும். நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்”.

# இயேசுவும் பாவிகளும்

**(லூக்கா. 15)**

சுவிசேஷ நூல்களில், இயேசுவைப் பகைத்தவர்கள் அவ்வப்போது அவரை இழிவு படுத்தும் காரியங்களைக் கூறி, அவரைக் குற்றவாளியாக்கப் பார்த்ததைக் கவனித்தீர்களா? இருப்பினும் நாசரேத்தூர் மனிதனின் அற்புதமான ஆளுகையின் காரணமாக, அவருக்கு விரோதமாகவும், அவரை இழிவுபடுத்தியும் பேசிய காரியங்களே அவருக்கு மகிமையாக மாறியுள்ளன. அவரை இழிவுபடுத்துவதற்காகப் பேசப்பட்டவையே, கடைசியில் அவருடைய சுவிசேஷத்தின் சிறப்பான மேன்மையான காரியங்களை வெளிப்படுத்துகின்றன. அவர்கள் விரும்பாமலேயே அவர்கள் அறியாமலேயே அவரைப் பகைத்தவர்கள் அவருடைய மகிமைக்கு சாட்சி பகர்கிறார்கள். உண்மையில் சுவிசேஷ நூலை. கிறிஸ்துவைப் பகைத்தவர்களின்படியான சுவிசேஷம் என்று கூறலாம். இதுகுறித்து சில எடுத்துக்காட்டுகள்.

ஒரு சமயம் அவர்கள் ஏளனமாக, "இவன் தச்சனுடைய குமாரனல்லவா ?" என்றார்கள். அதாவது "அவர் அற்பமானவர் அவர் யாரென்று எங்களுக்குத் தெரியும். எங்களைவிட அவர் ஒன்றும் உயர்ந்தவரில்லை. அவர் உண்மையில் ஒரு தச்சனாக இருக்கும் போது, அவர் ஏன் தன்னை ஒரு போதகராக நாசரேத்தில் காட்டிக்கொள்ள வேண்டும் ?" ஆனால் நடந்த உண்மை என்னவென்றால் அவர் தச்சனாயிருந்ததால், அத்தகைய உழைப்பாளிகளெல்லாா் மேலும் பரிதாபம் கொள்ள முடிந்தது. தச்சன் கடையில் நீண்ட ஆண்டுகளாகப் பணிபுரிந்ததால் நேர்மையான உழைப்பிற்கு அவர் மதிப்பை அளித்ததோடு, அவருடைய உண்மையான தாழ்மையைக் கண்டுகொண்டவர்கள் அவரிடம் பயபக்தியாயிருக்கக் காரணமானார். ஆகவே இன்று அதே கேள்வி வேறு ஒரு தொனியில் கேட்கப்படுகிறது. "இவன் தச்சனல்லவா ? மனித பலவீனத்தின் உணர்வுகளால் தொடப்பட்டவராய் மனித அனுபவத்தை நெருக்கமாக அறிந்த மனிதனல்லவா ? கஷ்டப்பட்டு உழைப்பதென்றால் என்னவென அறிந்த வேலை செய்யும் மனிதனல்லவா ?"

பிரதான ஆசாரியன் ஒரு தடவை, ''ஜனங்களெல்லாரும் கெட்டுப்போகாதபடிக்கு ஒர் மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்கும்", எனக்கூறினான். (யோவான் 11:50) நீதியைக் குறித்த அவனின் கெட்டுப்போன அறிவை நியாயப்படுத்தவும் விடுதலையாக்கப்படவேண்டிய ஒருவரின் தண்டனையை உறுதிப்படுத்தவும் இப்படிச் சொன்னான். ஆனால் அவனையும் அறியாமல், தேவனுடைய மைய நோக்கமாக அமைந்த மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனத்தைக் கூறிவிட்டான். இந்த மனிதனின் மரணத்தால் சிதறிக்கிடந்த, கைவிடப்பட்ட மக்கள் கூட்டிச் சேர்க்கப்பட்டு இரட்சிக்கப்பட்டார்கள்.

கசப்பான வேதனை நிறைந்த இருண்ட வேளையில் இந்த வார்த்தைகளை அவர் மீது அள்ளி வீசினார்கள். "மற்றவர்களை ரட்சித்தான். தன்னைத்தான் ரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை," என்றார்கள். அவருடைய மரணத்தின் மிக ஆழமான உண்மை இதுவல்லவா ? அவர் தம்மை ரட்சித்திருந்தால் வேறு யாரையும் ரட்சித்திருக்க முடியாது. அவர் தம்மைக் காப்பாற்ற மறுத்துவிட்டதால், அவர் மூலமாய் தேவனிடத்தில் வருகிற யாவரையும் இரட்சிக்க வல்லவராயிருக்கிறார்.

லூக்கா 15ல் இயேசுவைப் பகைத்தவர்கள், கடுமையான குற்றச்சாட்டும் பகைநிறைந்த அவதூறும் அவர் மீது சுமத்தினார்கள். "இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார் (வ.2) என்றார்கள்.'' இக்குற்றச்சாட்டில் அற்புதமானதும் எளியதுமான சாக்கிரமெந்து (திருவிருந்து) அடங்கியுள்ளது. அவர்கள் அதைக் குற்றமாகக் கூறினாலும் நாம் அதைக்



கேட்கும்போது "அவர் அப்படிச் செய்கிறதற்காய் தேவனுக்கு நன்றி." எனக் கூறத் தோன்றுகிறது. அவர் பாவிகளை ஏற்றுக் கொள்வதற்காய் தேவனுக்கு நன்றி. அதை நினைவுகூரும்படி நம் சிலாக்கியம் பெற்றிருக்கிறதால் நன்றி.

"இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார்" என்று அவர்கள் சொன்னபோது என்ன நினைத்திருப்பார்கள் என சற்றே யோசித்துப் பாருங்கள். அது ஒரு குற்றச்சாட்டு என்பதில் சந்தேகமே இல்லை. எதை ஆதாரமாகக் கொண்டு அப்படிப் பேசினார்கள் ? நாசரேத்தூர் மனிதன் பாவத்தைப் பற்றிக் குத்திக் காட்டும் பயபக்திக்குரிய காரியங்களைக் கூறுவதைக் கேட்டார்கள். மாய்மாலத்தின் மீது வரும் தேவ நியாயத்தீர்ப்பு குறித்து அவர் பேசியதைக்கேட்டு பயத்தில் வெளிறிப் போயிருந்தார்கள். மனித துன்மார்க்கம் பற்றிய அவரின் கூர்மையான கணிப்பினால், மக்களைச் சுட்டெரிக்கும் விதமாகப் பேசினார். விந்தையான காரியம் என்னவெனில் சுட்டெரிக்கும் இந்த வார்த்தைகளைப் பேசியிருந்தால், வெறுப்பை சம்பாதித்திருக்கும். ஆனால் நசரேயனாகிய இயேசுவின் உதடுகள் உச்சரித்த வார்த்தைகள் மக்களை அவரிடமாய் ஈர்த்தன. இந்த முரண்பாட்டைப் பாருங்கள் - மிகக் கடுமையான காரியங்களைச் சொன்னபோது, மிகப்பெரிய பாவிகளும் அவரிடம் நெருங்கி வந்தார்கள். மனித நிதானிப்பின்படி நம்பிக்கையற்றவர்களுக்கு சுட்டெரிக்கும், அவரின் வார்த்தைகள்." (வச1) பரிசேயர்கள் இதைக் கவனிக்காமல் இருக்க முடியவில்லை. இந்த மக்கள் அவரிடம் வந்தபோது, அவர்களை அவர் ஏற்றுக்கொண்டது குறித்து திகைத்து பிரமித்தார்கள். அவர்களை ஏற்றுக்கொண்டது மட்டுமல்ல, நட்புணர்வுடன் ஏற்றுக்கொண்டதால் தோழர்களாகவும், பாவத்தை பற்றிக் கடுமையாகப் பேசினாலும், பாவிகளை விட்டுத் தனியாக அவர் நின்று கொள்ளாமல் அவர்களோடு உட்கார்ந்து அப்பம் புசிக்குமளவிற்கும் அவர்களுடன் பழகினார். அவருடைய சுவிசேஷம் மற்றும் போதனைகளின் கண்டிப்பு, பாவியுடன் அவர் கொண்டிருந்த நட்போடு இசைந்து செல்லவில்லை.

ஆகவே பரிசேயர்கள் குழப்பமடைந்தார்கள். "பரிசேயரும் வேதபாரகரும் முறுமுறுத்து, இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார்", என்றார்கள். இந்த முறுமுறுப்பிற்குப் பின் வேறொன்று இருந்தது. பாவம் மற்றும் பாவிகள் பற்றி அவர்களுக்கிருந்த அறிவின் அடிப்படையில், "இந்தப் பாவிகளை இவர் ஏற்றுக்கொண்டு அவர்களிடம் அன்பாகப் பழகும்போது, அவர்களால் கறைபடாமல் இருக்க முடியாது. நெருப்பை மடியில் கட்டிக்கொண்டு, வேகாமல், இருக்கமுடியுமா ?" என்பது அவர்கள் வாதம். அவர்கள் நிதானிப்பின்படி அவர்கள் நினைப்பது சரிதான். அவர்களைப் போலவே அவருடன் இருந்திருந்தால் அவர்கள் கூறுவது உண்மையாயிருந்திருக்கலாம். நீங்கள் கெட்ட தோழர்களைத்

தெரிந்து கொண்டால், அவர்களின் கெட்ட பாதிப்பிற்கு நீங்களும் உட்பட வாய்ப்பு உண்டு. தகாதவர்களோடு அவர் கொள்ளும் தோழமையால் ரபி (போதகர்) எனும் பதவியை அவரே கெடுத்துக் கொள்வார். எனப் பரிசேயர் எண்ணியிருக்கக்கூடும். மிக மோசமான பரிசேயர் சந்தேகப்பட்டு எள்ளி நகையாடுபவர்களாயிருந்தனர். மிகச் சிறந்தவர்களோ ஏமாற்றமடைந்தார்கள்.

அவர்கள் கூறுவது தவறு என நம் உள்ளத்திற்கு மிக நன்றாகவே தெரியும் அவர்களுக்கு இந்த மனிதனைத் தெரியாது. அவர்கள் அவரைப் புரிந்து கொள்ளவில்லை. அவர் மக்களை ஏற்றுக்கொண்டு அவர்களால் கறைபடாமல் அவரால் இருக்கமுடியும். மனிதர்களை அவர்களில் உள்ள வைரஸோடும் அழுகலோடும் ஏற்றுக்கொண்டு தீங்கு அவரைத் தொடாமல் இருக்கமுடியும். என அவர்களுக்குத் தெரியவில்லை. ஆனால் அதற்கெல்லாம் மேலாக - மாசுபட்டவர்களும் கெட்டுப்போனவர்களும், உதவாதவர்களும் நட்போடு அவரண்டை நெருங்கியபோது, அவர்களே சுத்திகரிக்கப்பட்டார்கள். கழுவப்பட்டார்கள், சுகமடைந்தார்கள். அவர்கள் அவருக்கு ஊறு விளைவிக்கவில்லை. மாறாக சுவிசேஷத்தை அளித்ததன்மூலம் அவர்களை மறுபடியும் சிருஷ்டித்தார்.

இந்த முரண்பாட்டின் இரகசியம் “இந்த மனிதர்” என்ற வார்த்தைகளில் உள்ளது, ‘‘இந்த மனிதர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார்.” இரட்டை வேடம் அணியாத உண்மையின் உறைவிடமான இந்த மனிதர், தெளிந்த நீரைப்போலத் தெளிவானவர். தம் வாழ்க்கையை அதன் நிஜங்கள் மத்தியில் வாழ்ந்தவர். மற்றமனிதரைப்போலவே வாழ்க்கையின் சந்தோஷங்களையும் துக்கங்களையும் அனுபவித்தவர். ஒருநாள் உழைப்பிற்கான பணத்தைப் பெற ஒருநாள் முழுதும் எப்படி உழைக்க வேண்டுமெனத் தெரிந்த உழைப்பாளியான இந்த மனிதர் - சோதனையை மற்றெந்த மனிதனையும் விட அதிகமாக உணர்ந்தவர். இந்த மனிதர், நம்பிக்கைகுரிய மனிதர், பூமியில் வாழ்ந்தாலும் பரலோகத்தைச் சார்ந்திருந்தார். முற்றிலும் தேவன்மீது கொண்டுள்ள நம்பிக்கையால் அனைத்து உலக உறவுகளையும் மாற்றியவர் இந்த மனிதர். துக்கம் நிறைந்தவர். அவர் சொந்த வாழ்க்கையின் துக்கங்களல்ல. ஆனால் தோல்விகளையும் முரட்டாட்டத்தையும் (கலககுணம்) சுமப்பதினால் வந்த மனவேதனை, பரிதாபம் கொண்டதால் வந்த துக்கம் அவர் மனதுருக்கம் கொள்ளத் தூண்டியது. இந்த மனிதர் - வெற்றி கண்ட மனிதர். நூற்றாண்டுகள் பலவாக தன்னந்தனியராய் பாவத்தை நேருக்கு நேர் சந்தித்து அதை ஜெயித்தவர். ராஜரீக மேன்மையோடு யுத்தகளத்தில் அமைதலாக ஜெயித்தவர்.

உண்மையுள்ளவராக, உழைப்பாளியாக, சோதனையைச்சந்தித்தவராக, நம்பிக்கையுள்ளவராக, துக்கம் நிறைந்தவராக, வெற்றி, சிறக்கிறவராக



இருக்கிறபடியால், இறுதியாக அவரே ஒப்புரவாக்குதலின் மனிதனாக மிக உயர்ந்து நிற்கிறார். கிருபாசன மனிதர் - மனிதரின் தோல்வியும் தேவகிருபையும் சந்தித்து ஒன்றோடொன்று கலக்கக் கூடிய இடமாகிய பூமிக்கும், பரலோகத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் நிற்கிறார் - தேவஅன்பின் பரிபூரண உதவியாக நிற்கும் தெய்வ ஆட்டுக்குட்டி.

இதோ, இங்கே விளக்க முடியாத புதிர். இப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும், இவர் சீக்கிரத்தில் எருசலேமில் அண்ட சராசர சாம்ராஜ்ய அரியணையில் அமர்வது உறுதியாயினும் - நம்மைவிட மிகமிக உயரத்தில் இருக்கும் புகழ்வாய்ந்தவரானாலும் - அவருடைய மகிமையின் முழு பிரகாசத்தால் நம் கண்கள் கூசுகிறதாயிருந்தாலும் - மனித அறிவிற்கு அப்பாற்பட்ட நிலை கடந்தவராய், எங்கும் நீக்கமற நிறைந்தவராய் அவர் இருந்தாலும் - முழங்கால்கள் யாவும் அவருக்கு முன் முடங்கி, நாவுகள் யாவும்: அவரை அறிக்கை பண்ணினாலும் இங்கே விளக்க முடியாத புதிர் ஒன்று உண்டு - இந்தமனிதர் பாவிகளை ஏற்றுக்கொள்கிறார்.

ஒருநாள் வருகிறது. அப்பொழுது அவர் செங்கோலை மக்கள் முத்தமிட்டு, எதிர்க்கவோ, சவால்விடவோ முடியாத அவருடைய ஆளுகைக்கு அடங்கவேண்டும். ஆயினும் இப்பொழுது அவர் நமக்கு மிக மிக அருகில் இருக்கிறார். நம் தோல்வி நேரத்தில், நாம் கபடமுள்ளவர்களாயும் வாய்ச்சொல் புரட்டர்களாவும் இருந்தாலும் நாம் இருக்கிறபடியே அவர் நம்மை ஏற்றுக்கொள்கிறார். மீண்டும் மீண்டும் நாம் பாவம் செய்கிறோம் என்ற அறிவுடன், நம் வாயினால் அறிக்கையிட்டு, நம் இருதயத்தில் தீர்மானித்தவர்களாய், திருந்திய வாழ்க்கை உறுதிசெய்யப்பட்டதால் நாம் இருக்கும்போது நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான உள்ளத்தின் மேல் குற்றமற்றவன் எனத்தீர்ப்பு உரைப்பார். அந்த பாக்கியமான தீர்ப்பில் சீ என்ற ஒழுக்கச்சிதைவு முடிவுற்றது. மாசு நீங்க சுத்திகரிக்கப்பட்டது.

இந்த மனிதர் பாவிகளை ஏற்றுக்கொள்கிறார் - அவர்களைப் போஷிப்பவராக அல்ல, மன்னிப்பையும் புதுப்பித்தலையும் கொடுப்பதற்காக, வேலை இன்னும் முடியவில்லை. நம்மைப் போன்ற மனிதர்கள், தெளிவான இரு பளபளக்கும் வழிகளைக் கண்டு, பொதுவாகத் தவறான பாதையையே தெரிந்து கொள்ளும் சோதனைக்கு இடம் கொடுக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு வேலை இன்னும் முடியவில்லை. மறுபடியும் அவர்களுக்கு ஆதரவும் உதவியும் தேவைப்படும். வாழ்க்கைக்கடல் அலைகள் மறுபடியும் கட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டும். புயல்கள் அமர்ந்திருக்கும்படி செய்யவேண்டும். ஓய்வில்லாமல், தொடர்ச்சியாக இந்தமனிதர் பாவிகளை ஏற்றுக்கொள்கிறார்.

நாம் ஆரம்பித்த இடத்திற்கே திரும்ப வருவோம். ராஜா நடந்து கொண்டவிதம்

பற்றிப் பரிசேயர்கள் குறை கூறினது பற்றிப் பார்த்தோம். ஏன் அவர் தீண்டத் தகாதவர்களுக்குத் தோழனாயிருந்தார்? அவர் ஏன் குற்ற உணர்வுள்ளோரிடம் பணிபுரிந்தார்? ஆதரவற்றவர்களிடம் ஏன் மென்மையாகப் பேசினார்? மனித உயிர்கள் சேதமடைந்த இடத்தில் அவர்கள் மத்தியில் இவர் ஏன் போயிருந்தார்? பரிசேயர்கள் தங்கள் வேதத்தை நினைவு கூர்ந்திருந்தால், ஏசாயா மேசியாவைப் பற்றி எழுதியிருந்தது நினைவிற்கு வந்திருக்கும். "அவர் நெரிந்த நாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும் இருப்பார்" (ஏசாயா 42:3). நெரிந்த நாணலைப் பற்றி மற்ற மக்கள் "அது உடைந்து விட்டது, இனி பிரயோஜனப்படாது," என்பார்கள். ஆண்டவரோ, "அது உடைந்திருக்கிறது. அதைச் செப்பனிட (சரி செய்ய) முடியும்" என்பார். மங்கியெரிகிற திரிபற்றி மற்றவர்கள்'', மங்கி எரிகிறது. அதை அணைத்துப்போடு'' என்பார்கள். ஆண்டவரோ "அது மங்கி எரிந்துக்கொண்டிருக்கிறது. அதைஊதி கொழுந்து விட்டு எரியச் செய்யலாம்" என்பார்.

ராஜா இரண்டு மகன்களைப் பற்றிக்கூறிய உவமையை நினைத்துப்பாருங்கள். (லூக்கா 15:11-32). அவர் பாவிகளை ஏற்றுக்கொண்டது பற்றிக் குறை கூறிய ஆவியை, பரிசேயருக்காக உருவகப் படுத்திப் பேசினார். மூத்த குமாரன் அவர்களுடைய குற்றப்படுத்தும் குணத்தின் அவதாரம். நாசரேத்தூர் மனிதனைப் பற்றி அவர்கள், "இந்தப் பாவிகள் ஒதுக்கித் தள்ளப்பட்டவர்கள். அவர் ஏன் அவர்களை சரியாக மதிப்பீடு செய்யக் கூடாது? அவர்களை அவர் ஏன் அப்படியே விட்டுவிடக் கூடாது?" என்று குறைப்பட்டுக் கொண்டார்கள்.

இயேசு பரிசேயர்க்கு இப்படி பதிலிறுத்தார் : "நான் அப்படி இருக்கிறேனென்று சொல்லுகிறீர்கள். நல்லது நீங்கள் எப்படி இருக்கிறீர்களென்று நான் சொல்லுவேன்" பின்னர் இரு குமாரர்கள் பற்றி உவமையைக் கூறினார். மூத்தவன் பரிசேயர் கொண்டிருந்த மனப்பான்மையைக் காட்டுவதாகக் கூறினார். தகப்பன் இளைய குமாரனிடம் பரிவுடன் இருந்ததை மூத்தவன் வெறுத்தான். சிடுசிடுப்பான அவன் மனிதரோடு பழகத் தகுதியற்றவனாக இருந்தான். அவன் ஆவலாதி கூறினான். கோபப்படுகிறவனாகவும் வெறுப்படைந்தவனாகவும் இருந்தான். மூத்த குமாரன். இளையவனைப் பற்றி "உம்முடைய குமாரன்" (வ.30) என்று கூறுகிறான். இளையவன் தன்னுடைய தம்பி என ஒத்துக் கொள்ள மாட்டானாம். தகப்பன் தன் பதிலில் இளையவனைப் பற்றி "உன்னுடைய தம்பி" என்று கூறுகிறார். "உன் சகோதரனாகிய இவனோ மரித்தான். திரும்பவும் உயிர்த்தான். காணாமற் போனான். திரும்பவும் காணப்பட்டான்" ஆம், இந்த உவமையிலே பரிசேயரின் மனப்போங்கைக் காட்டும் விதமாயப் பேசினார்.

ஆனால் இங்கே நாம் சிந்திக்க வேண்டிய ஒன்றுண்டு. தகப்பனும் இரண்டு குமாரர்களும் என்ற இந்த உவமையில் மூத்த குமாரன் உலகக் காரியங்களில்



உண்மையாயிருந்தான். பரிசேயர்கள் எப்படி நடந்துகொண்டார்களோ அதுபோல, ஆனால் தேவனுடைய சித்தப்படி அல்ல. தேவனுடைய பார்வையில் ஒரே பேறான குமாரன் தான் மூத்த குமாரன்.

நித்திய ஆவியின் பரிசுத்த குமாரன். இளைய குமாரன் தூரதேசத்தில், பாவத்திலும் அவமானத்திலும் அவதியுறும் மனிதகுலம் - பாவத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒருமனிதன். தந்தையின் இருதயம் துக்கத்தில் கனத்தது. குடும்பமே மாறிப்போயிற்று. அவமானத்தால் குடும்பம் துக்கித்தது. பின் தேவனுடைய திட்டத்தில் ஒருநாள் வந்தது. பிதா தமது குமாரனைப் பார்த்து, "காணாமல் போனதை நாம் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். பையன் தானாக வீட்டிற்கு வரமாட்டான் - அவன் வெகு தொலைவு போய் விட்டான். மூத்த குமாரன் மனமுவந்து எழுந்தார்." "பிதாவே, உமது சித்தம் செய்யப்படுவதாக - என்ன ஆனாலும் சரி. நான் அவனைக் கொண்டு வருவேன்" என்றார். ஒவ்வொரு இடமாகப் போய் சீர்கெட்டுப்போன மனிதனைத் தேடினார். காற்று, மழை, புயல் எல்லாவற்றையும் எதிர்த்து, அலைந்து திரியும் பையனைத் தேடிப்போனார். பள்ளத்தாக்கின் வழியெல்லாம் தேடினார். கடைசியில் சேற்றில் புதையுண்டவனாய் அவரை நிர்வாணியாய், பட்டினியில் தவித்துக் கொண்டிருந்த பையனைக் கண்டார். இந்த மூத்த குமாரன் குனிந்து, உற்சாகமூட்டும் வார்த்தை ஒன்றைப் பையனின் காதில்கூறி, அவனை அப்படியே தூக்கித் தன் அகன்ற தோளில் சுமந்தார் - அந்தத் தோளின் மீது ஓர்நாள் கர்த்தத்துவம் தங்கும். விசுவாசத்தினாலும் தைரியத்தாலும் அவர்கள் வீடு நோக்கி நடந்தார்கள். இருண்ட பள்ளத்தாக்கை விட்டு, மழையில் நனைந்தவாறு, சதுப்பு நிலத்தைக் கடந்து வந்தார்கள். இளையவன் பயத்தினால் வீடு திரும்பத் தயங்கி வந்த வழியே திரும்பிப் போக முயன்றான். ஆனால் மூத்த மகன் அவனை அவன் வழிக்கு விடுவதாயில்லை. கடைசியில் அவனை வீடு கொண்டு வந்து சேர்த்தார். பிதாவின் வீட்டில் மிகுந்த மகிழ்ச்சி உண்டாயிற்று. இரட்சிப்பின் கீதம் ஒன்றைப்பாடினார்கள். காணாமல் போனவன் கண்டுபிடிக்கப்பட்டான். மரித்தவன் உயிரோடு எழுப்பப்பட்டான். இரட்சிக்கப்பட்ட வேலைக்காரனாக அல்ல. மகனாக, அதுதான் நடந்தது. பரிசேயர்கள் பிரியப்படாதது. ஆனால் தேவனுடைய தீர்மானமான ஆலோசனையினால் அவர் சித்தம் கொண்டது. "இவர் பாவிகளை ஏற்றுக் கொள்கிறார்" - ஏற்றுக் கொள்வது மட்டுமல்ல. அவர்கள் பின்னாகப் போய் அவர்களை மீட்டுக் கொள்கிறார்.

எல்லாக் காலத்திற்குமாக ஒரே கல்வாரி மலையிலே நடந்த சம்பவம் அர்த்தமுள்ளது. அது இன்று வரை நடந்து கொண்டே இருக்கிறது. மனித சுபாவங்கள் சிதைவுண்ட நிலையில், அவர்களை ஏற்றுக்கொள்கிறவர் அவர்களைத் தேடிப் போகிறார் - கெட்ட குமாரர்கள், திரும்பி வருகிறார்கள்

எனப் பாட்டு பாடப்படுகிறது. புத்தி தெளிந்தவர்கள், “தகப்பனே பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவம் செய்தேன்” என்கிறார்கள்.

முன்பு கசப்பினால், கோபத்தால் நிறைந்து, நிம்மதியற்று, உலகப்பற்றுள்ளோராய் செயலிழந்தவர்களாய் இருந்தவர்கள் வந்து மீட்பர் மீது குற்றம் கூறும், வார்த்தைகளை உதிர்த்தவர்கள், அந்த வார்த்தைகள் உண்மையெனக் கண்டார்கள். அவர் பாவிகளை ஏற்றுக்கொள்கிறார் தான்.

# ஆண்டவர் பக்கம்

**(மணித்துளி சிந்தனை)**

அமெரிக்க உள்நாட்டுப் போர்க் காலம் முழுவதிலும் இரு திறத்தாரும் தாங்கள் நீதிக்காகப் போராடுவதாகவும், ஆண்டவர் தங்கள் பக்கம் தான் இருக்கிறார் எனவும் கூறிக்கொண்டார்கள். குடியரசுத் தலைவர் ஆபிரகாம் லிங்கனிடம், தேவன் அவர் பக்கம் இருப்பதாக அவர் நினைக்கிறாரா என்று கேட்டபோது, அவர் அந்தக் கேள்வியைத் திருப்பிப் போட்டுக் கேட்டார். “அதைக் குறித்து எனக்குக் கவலையே இல்லை. ஏனென்றால் கர்த்தர் எப்போதுமே சரியானவர்களின் பக்கம் தான் இருக்கிறார். என் தொடர்ச்சியான கவலையும் ஜெபமும் நான் கர்த்தர் பக்கம் இருக்கவேண்டும் என்பதுதான்”.

நம்மில் அநேகர் தேவன் பக்கம் இருப்பதாகவே எண்ணிச் செயல்படுகிறோம். யாராவது நம்மை எதிர்த்தால், அவர்கள் தேவனையே எதிர்க்கிறார்கள் என்கிறோம். யோசுவாவும் கூட இஸ்ரவேலர் யோர்தானைக்கடந்து செல்ல வழிநடத்தும் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அவன் தேவனின் பக்கமாகத் தானிருக்கக் கூடும் என்பதற்கு எந்த உறுதியுமில்லை என்ற பாடத்தைக் கற்கவேண்டியிருந்தது. யோசுவா எரிகோவுக்கருகில் வந்தபொழுது, உருவிய பட்டயத்தைத் தன் கையில் பிடித்தவராய் நின்று கொண்டிருந்த ஒரு மனிதனைக் கண்டான். யோசுவா அவரிடத்தில் போய், ‘‘நீர் எங்களைச் சேர்ந்தவரோ எங்கள் சத்துருக்களைச் சேர்ந்தவரோ?” என்று கேட்ட பொழுது, அவர், “அல்ல, நான் கர்த்தருடைய சேனையின் அதிபதியாய் இப்பொழுது வந்தேன்” என்றார். யோசுவா தேவன் பக்கம் இருக்க விரும்பினால், அவன் என்ன செய்யவேண்டுமென தேவன் விரும்பினார் என்பதை அவன் கண்டுபிடிக்க வேண்டும்.

ஆபிரகாம்லிங்கன் விவேகமாய்க் கண்டுகொண்டது போல, நாம் தான் நமது





நினைவுகளும் செயல்களும் தேவனுடைய சித்தத்திற்கு இசைந்ததாக இருக்கும்படிப் பார்த்துக் கொள்ளவேண்டும். உன்னதமானவர் மனிதருடைய ராஜ்யங்களை ஆள்கிறார் என தானியேல் உரைக்கிறார். உலகப் பிரகாரமான சண்டைகளில் தேவனின் நோக்கம் யாது? எது கர்த்தர் பக்கம் என்பதை நாம் அறியோம். இரண்டாம் உலகப்போரின்போது யூத இனப் படுகொலைக்குக் காரணமான தீங்கு, இஸ்ரேல் நாடு தோன்றுவதற்கு வழி வகுத்தது. நம் முன்னுரிமையோ, கர்த்தருக்குக் கீழ்படிந்து, அவருக்கு ஊழியம் செய்வதோடு, அதற்கான விளைவு அவர் கட்டுப்பாட்டில் உள்ளது என நம்பி விட்டு விடவேண்டும் என்பது.

“கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? அவர்கள் என்னிடத்தில் சேரக்கடவர்கள் என மோசே கூறியபொழுது, லேவியின் புத்திரர் எல்லாரும் அவனிடத்தில் கூடிவந்தார்கள்’’ என யாத்திராகமத்தில் வாசிக்கிறோம். கர்த்தருடைய பட்சத்தில் இருக்க லேவியின் புத்திரர் எழுந்து நடந்து செல்ல வேண்டியிருந்தது என்பதைக் கவனியுங்கள். நாம் எதையும் செய்யாமல் அமர்ந்திருந்தவாறு, தேவன் பக்கம் இருக்க முடியாது.

எபிரேயருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் ‘‘நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை” என்று கர்த்தர் உரைக்கிறார். ஆனால் யார் கர்த்தரைச் சேவிப்பதைத் தெரிந்துகொள்கிறார்களோ அவர்களுக்குத் தான் இந்த வார்த்தைகள் பொருந்தும்.

ராஜாவாகிய ஆசாவிற்கு தீர்க்கதரிசி கூறிய வார்த்தைகள் நமக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. "ஆசாவே, யூதா பென்யமீன் கோத்திரங்களின் சகல மனுஷரே, கேளுங்கள், நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார்; நீங்கள் அவரைத் தேடினால் உங்களுக்கு வெளிப்படுவார். அவரை விட்டு விட்டீர்களேயாகில், அவர் உங்களை விட்டுவிடுவார்." கர்த்தர் நமது பக்கம் இருக்க நாம் விரும்புகிறோமெனில், நாம் அவர் பக்கம் இருக்க வேண்டும் என்பது உறுதி.

ஏசாயா கூறுவதாவது : ''கர்த்தர் எங்களுக்குச் செய்தருளின எல்லாவற்றிற்கும் தக்கதாகவும், அவர் தம்முடைய இரக்கங்களின்படியும் தம்முடைய திரளான தயவுகளின்படியும், இஸ்ரவேல் வம்சத்துக்குச் செய்த மகா நன்மைக்குத் தக்கதாகவும், கர்த்தருடைய கிரியைகளையும் கர்த்தருடைய துதிகளையும் பிரஸ்தாபம் பண்ணுவேன். அவர்கள் என் ஜனந்தானென்றும், அவர்கள் வஞ்சனை செய்யாதிருக்கும் பிள்ளைகளென்றும் சொல்லி, அவர்களுக்கு இரட்சகரானார். அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார். அவருடைய சமூகத்தின் தூதனானவர் அவர்களை இரட்சித்தார். அவர் தமது அன்பினிமித்தமும் தமது பரிதாபத்தினிமித்தமும் அவர்களை மீட்டு, பூர்வ நாட்களிலெல்லாம் அவர்களைத் தூக்கிச் சுமந்து வந்தார். அவர்களோ கலகம்பண்ணி அவருடைய பரிசுத்த ஆவியை விசனப்படுத்தினார்கள். அதினால் அவர் அவர்களுக்குச் சத்துருவாய் மாறி, அவரே அவர்களுக்கு விரோதமாய் யுத்தம் பண்ணினார்".

மெய்யாகவே தேவன் இஸ்ரவேல் புத்திரரின் இரட்சகராயிருந்தார். இருப்பினும் 'ஆனால்' 'அவர்கள்' என்ற சிறிய வார்த்தை எல்லாவற்றையும் மாற்றி விட்டது. ''அவர்களோ கலகம் பண்ணினார்கள்'' அதன் விளைவாகக் கர்த்தர் எதிர்ப்பக்கத்தில் அவர்களுடைய சத்துருவாயிருந்து அவர்களுக்கு விரோதமாய் யுத்தம் பண்ணினார்.

விசனமான காரியம் என்னவென்றால், தங்கள் செயல்களும் நம்பிக்கைகளும், எப்படியிருந்தாலும், தங்களுக்குத் தேவையானபோது தேவன் தங்களோடிருப்பார் என அநேகர் நினைக்கிறார்கள்.

நாம் இருக்கும் இடங்களை மாற்றி, கர்த்தரின் பட்சத்தை விட்டுத் தவறான பக்கம் போய்விடுவது சாத்தியம் என்பதற்குச்சான்றாக ஏசாயாவின் வார்த்தைகள் விளங்குகின்றன. நாம் அப்படிச்செய்தால், கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணுவதற்கு முன் தேவன் நமக்குத் தந்தருள விரும்பின எல்லா உதவி மற்றும் ஆசீர்வாதங்களை இழந்து விடுகிறோம்.

ஒரு ஆலயத்தில் இப்படி எழுதியிருந்தது : "நீ தேவனுக்கு நெருக்கமாக



உணரவில்லையென்றால், தூரமாகச் சென்றது யார்?" ஏசாயா நமக்கு அறிவுரையாக, "கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள். அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள், துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன் மேல் மனதுருகுவார், நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன். அவர் மன்னிக்கிறதற்குத் தயைபெருத்திருக்கிறார் என்று கூறுகிறார். நாம் கர்த்தர் பக்கம் இருக்க விரும்பினால், அவர் நம்மோடு இருக்கும்படி அவரைக் கருத்தாய் தேடவேண்டும்". "தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்", என யாக்கோபு கூறுகிறார். நாம் அவரை விட்டுவிட்டு நம் சொந்த வழியில் சென்றால் அவர் நமக்கு விரோதமாயிருப்பார்.

ஆகவே யார், யாருடைய பக்கம் இருக்கிறார்கள் என்று பாருங்கள். லேவியர்களைப்போல நாம் செயல்படவேண்டும். ஆபிரகாம் லிங்களைப் போல கவலையோடும் ஜெபத்தோடும், நம் செயல்களை வழி நடத்தும் தேவனுடைய வழிகளை எப்படிக் கற்றுக்கொள்வது என நாட வேண்டும். யோசுவாவைப் போல, நாம் ஒரு கூட்டம் விசுவாசிகளோடு சேர்ந்திருப்பதால், தேவன் நம் பக்கம் இருப்பதாக நாம் ஒருபோதும் எண்ணக்கூடாது.

"தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" எனும் ஆறுதலான வார்த்தைகளைப் பவுல் கூறுகிறார். தேவன் நம் பட்சத்திலிருந்தால், பூமியிலுள்ள எந்த சக்தியும் நம்மைத் தோல்வியுறச் செய்ய முடியாது. கர்த்தரைத் தேடி தீயவழிகளை விட்டு விலகுவதால் கர்த்தர் பக்கம் நாம் இருக்கும்படி தீர்மானம் செய்வோமாக. அப்பொழுது, கர்த்தர் நம் பட்சத்திலிருந்தால், சகலமும் நம் நன்மைக்கேதுவாக நடக்கும்.

**ராபர்ட் ஜே. லாயிட்**

# வினாவிடை

1. எந்த நாளில் தேவன் பறவைகளைப் படைத்தார்?
2. ஆதியிலே மனிதன் எதை உண்ணுவதற்கு தேவன் அனுமதித்தார்?
3. புயலினால் எத்தனை பிள்ளைகளை யோபு இழந்தான்?
4. மீதியானியரிடமிருந்து யோசேப்பை விலைக்கு வாங்கினது யார்?
5. வேதாகமத்தில் கூறப்பட்டவர்களில் மிக நீண்டகாலம் வாழ்ந்தவர் யார்?
6. ராஜாவாகிய தன் கணவனுக்கு முன் வரும்படி கூறப்பட்ட கட்டளையை ஏற்க மறுத்தது யார்?

7. சிசெரா, மற்றும் யாபீனின் சேனையைத் தோற்கடிக்கும்படி பாராக்குக்கு சொன்ன தீர்க்கதரிசினி யார்?

8. யாரைப் பேற்ற உடனேயே யாக்கோபின் மனைவி ராகேல் மரித்தாள்?

9. யூதாஸ் தன்னைக் காட்டிக் கொடுப்பான் என்பதைக் காட்ட அடையாளமாக இயேசு எதை யூதாசுக்குக் கொடுத்தார்?

10. யோவான் ஸ்நாகனகனின் தாயார் யார்?

**விடைகள் :**

ஐந்தாம் நாள், பூமியின் மேல் வளரும் அனைத்துத் தாவரங்களும் மரங்களும், 10, போத்திபார், மெத்தூசேலோ (969 ஆண்டுகள் ஆதி 5:27) வஸ்தி தெபோராள், பென்யமீன், அப்பம், எலிசபெத்)

# வாசித்துச் சிந்தித்தல்

**(பத்திரிக்கை 41ன் தொடர்ச்சி)**

## மேற்கோள் 6 : தேவனுடைய வாக்குத்தத்தங்கள் விசுவாசத்தினால் சுதந்தரித்துக் கொள்ளக்கூடியவை

கலாத்தியர் 3:6-9

கலா. 3:6 அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது.

கலா. 3:7 ஆகையால் விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக.

கலா. 3:8 மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது.

கலா. 3:9 அந்தப்படி விசுவாசமார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்.

### மேற்கோள் 7 : இரட்சிப்பைக் கொண்டு வரும் ஆபிரகாமின் குமாரனும், வாக்குத்தத்தத்தின் குமாரனுமாகிய இயேசு கிறிஸ்து

கலாத்தியர் 3:15-18

கலா. 3:15 சகோதரரே, மனுஷர் முறைமையின்படி சொல்லுகிறேன்; மனுஷர்களுக்குள்ளே உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை ஒருவனும் தள்ளுகிறதுமில்லை, அதினோடே ஒன்றையும் கூட்டுகிறதுமில்லை.

கலா. 3:16 ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும்



வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக்குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே.

கலா. 3:17 ஆதலால் நான் சொல்லுகிறதென்னவெனில், கிறிஸ்துவை முன்னிட்டுத் தேவனால் முன் உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை நானூற்றுமுப்பது வருஷத்திற்குப்பின்பு உண்டான நியாயப்பிரமாணமானது தள்ளி, வாக்குத்தத்தத்தை வியர்த்தமாக்கமாட்டாது.

கலா. 3:18 அன்றியும், சுதந்தரமானது நியாயப்பிரமாணத்தினாலே உண்டானால் அது வாக்குத்தத்தத்தினாலே உண்டாயிராது; தேவன் அதை ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தத்தினாலே அருளிச்செய்தாரே.

### மேற்கோள் 8 : கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானத்தின் மூலம் நாம் ஆபிரகாமினின் குமாரராகி நித்திய ஜீவன் பற்றிய வாக்குத்ததங்களைச் சுதந்தரித்துக் கொள்ளலாம்.

கலாத்தியர் 3:26-29

கலா. 3:26 நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே.

கலா. 3:27 ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே.

கலா. 3:28 யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.

கலா. 3:29 நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்.

**ஆபிரகாமின் மூலம் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என தேவன் வாக்கு அருளினார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆபிரகாமின் வித்து (சந்ததி) யார்? (மேற்கோள் 4, 7 காண்க) அவர் பிறப்பதற்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே தேவன் எங்ஙனம் அவரைக் குறித்து ஒரு வாக்குத்தத்தைக் கொடுக்க முடியும்? (மேற்கோள் 6 வசனம் 8)**

ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வித்து இயேசு கிறிஸ்து, 2000 ஆண்டுகள் செல்லும் வரை இயேசு பிறக்காவிட்டாலும், ஆதியிலிருந்து அந்தம் வரை அறிந்த தேவன், ஆரம்ப காலத்திலிருந்தே இயேசுவின் வாழ்க்கையை முன்னறிந்திருந்தார். உண்மையில் இரட்சகர் இயேசுவை மனதில் வைத்தவாறு தான் தேவனுடைய முழு சிருஷ்டிப்பும் நடந்தேறியது.

பேதுரு தமது நிருபங்கள் ஒன்றிலே இவ்வாறு எழுதியுள்ளார். “அழிவுள்ள

வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல் குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. அவர் உலகத் தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டிவராயிருந்து, நமது மூலமாய் தேவன் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசி காலங்களில் வெளிபட்டார்." 1 பேதுரு 1:18-21

இந்த உலகம் கிறிஸ்துவைப் பின்பற்றத் துவங்குமுன்னரே, எல்லா விசுவாசிகளும் தேவனால் அறியப்பட்டிருக்கிறார்கள் என வேதாகமம் நமக்குச் சொல்லுகிறது. இயேசுவின் சுவீகாரத்தின்படி, யூதர்களல்லாத எபேசியர்களும் ஆபிரகாமுக்கு அருளப்பட்ட வாக்குத்தத்தங்களின் ஒரு பகுதியாக இருக்கலாம் எனப் பவுல் அப்போஸ்தலன் எபேசியர்களை உற்சாகப்படுத்தினார்.

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.. தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்கும் புகழ்ச்சியாக... நம்மை இயேசு கிறிஸ்து மூலமாகத் தமக்குச் சுவிகார புத்திராகும்படி முன்குறித்திருக்கிறார்." (எபேசியர் 1:3-5).

இக்கருத்தை விளக்கும் விதமாய் மக்கள் தங்கள் காலத்திற்கு முன்னர் இருந்ததாக தேவன் அழைக்கும் இன்னொரு எடுத்துக்காட்டு இங்கே தரப்படுகிறது. "கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி அவர் : நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன். நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாக கட்டளையிட்டேன் என்று சொன்னார். அப்பொழுது எரேமியா : ''ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, நான் பேச அறியேன்; சிறு பிள்ளையாயிருக்கிறேன்.'' என்றான். ஆனாலும் கர்த்தர் : ''நான் சிறுபிள்ளையாயிருக்கிறேன்'' என்றான். ஆனாலும் கர்த்தர் : ''நான் சிறுபிள்ளையென்று சொல்லாதே, நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய், நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளை யெல்லாம் நீ பேசுவாயாக. நீ அவர்களுக்கு பயப்படவேண்டாம். உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்" என்று சொன்னார்.

**கேள்வி 5.5**

**ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் இயேசு - இவர்களெல்லாரும் இஸ்ரவேலர்கள். அப்படியென்றால் வாக்குத்தத்தம் இஸ்ரவேலர்களுக்கு மட்டும்தான் உரியதா ? உன் விடையை விளக்கமாகத்தருக. (மேற்கோள் 8ஐ வாசிக்கவும்)**

ஆபிரகாமின் சந்ததியார் என்றால் உடல்ரீதியாக அல்லது மரபனு ரீதியாகப் பிறந்த சந்ததியார் மட்டும் தான் என்று கருதப்படலாகாது. மெய்யான ஆபிரகாமின்



பிள்ளைகள் ஆபிரகாமுக்கு இருந்த அதே விதமான விசுவாசத்தை உடையவர்கள் - அவர்கள் இனமோ அவர்களின் மூதாதையனை பற்றிக் கவலையில்லை. ஆபிரகாமின் வித்து என வாக்குத்தத்தங்களில் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ள இயேசுவின் சீஷனாக விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் பெற்றதனால் ஆபிரகாமோடு "ஆவிக்குரிய" இணைப்பு ஏற்படுகிறது.

ஞானஸ்நானம் என்றால் யோவான் மக்களுக்கு யோர்தான் நதியில் ஞானஸ்நானம் கொடுத்தபோது போல தண்ணீரில் மூழ்குவதாகும். பழைய உடன்படிக்கையின்படி, ஆபிரகாமுக்கு அருளிய வாக்குத்தத்தங்களின் ஒரு பகுதியாக விருத்தசேதனம் முக்கியமானதாக இருந்தது. ஆனால் புது உடன்படிக்கையின்படி, ஆபிரகாமுடைய வித்தின்கீழ் விசுவாசிகள் கிறிஸ்துவில் தங்களுக்குள்ள விசுவாசத்தை வெளிப்படுத்த ஞானஸ்நானம் பெறவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறார்கள். ஞானஸ்நானம் என்பது வெறுமனே தண்ணீரில் மூழ்கி எழுதுவது மட்டுமல்ல. அதன் முக்கியத்துவம் மக்கள் தேவனையும் அவருடைய திட்டத்தில் அவருடை குமாரன் இயேசுவையும் அறிக்கை செய்வதோடு ஒரு புதிய வாழ்க்கைக்கெனத் தீர்மானம் செய்து தங்களை ஒப்புவிப்பது. நியாயப்பிரமாணத்தின் கீழ், யூத ஆண் குழந்தை பிறந்த 8ம் நாள் விருத்தசேதனம் பண்ணப்படுகிறது. ஆனால் புதிய ஏற்பாட்டின் கீழ் விசுவாசம் மற்றும் நம்பிக்கையின் மூலம் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்.

ஒரு சமயம் ஒரு கட்ட மக்கள் தேவனைப் பற்றிய செய்தியைக் கேட்டு அதை நம்பின பின்பு "நாங்கள் என்னசெய்ய வேண்டும் ?" என்று கேட்டார்கள். அதற்கு பேதுரு "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்," என்றான் (அப்போஸ்தலர் 2:37,38)

பவுல் ஞானஸ்நானம் பற்றி ரோமருக்கு எழுதிய நிருபத்தில் இன்னும் தெளிவாகக் கூறுகிறார்.

"கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா ? அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோலிருந்து எழுப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் கடந்துகொள்ள வேண்டும். அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப் பட்டதென்று அறிந்திருக்கிறோம்... ஆகையால் நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக." ரோமர் 6:3-12.